# 12. பிரச்சார விளம்பரக் காட்சிப்படுத்தல் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் - செயல்வழிப் படம்

டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் செய்திகள்/ கொடுக்கல் வாங்கல்கள் (SMS / WhatsApp / e-mail)

இணையத்தளம் ஊடாக அல்லது சமூகமளித்து பிரச்சார விளம்பரக் காட்சிப்படுத்தலுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொண்டு ஏற்புடைய இணைப்புக்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை இணையத்தளம் ஊடாக அல்லது முன் அலுவலகத்திற்கு சமூகமளித்து கையளித்தல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

கோரிக்கை, துணைவிதியின் நியமங்களுடன் ஒத்துச் செல்கின்றதா என்பதைப் பரீட்சித்து விண்ணப்பதாரிக்குத் தொடராய்வு இலக்கமொன்றை வழங்குதல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

அறவிடப்பட வேண்டிய கட்டணம் தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தினை வருமானப் பரிசோதகருக்கு முன்வைத்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

துணைவிதியின் நியமங்களுடன் இயைந்து செல்வதைப் பரீட்சித்து, அறிவிடப்பட வேண்டிய கட்டணம் தொடர்பான பரிந்துரைகளை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக நகர ஆணையாளருக்கு/ செயலாளருக்கு முன்வைத்தல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

அனுமதிப்பத்திரத்தை வழங்குவது பற்றிய பரிந்துரையை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல் தொடர்பான தீர்மானத்தினை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு வழங்குதல்

பொறுப்பு: நகர ஆணையாளர்/ செயலாளர்

↓

கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

**ஆம்**

அனுமதிப்பத்திரத்தைத் தயாரித்து நகர ஆணையாளரின்/ செயலாளரின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்டு முன் அலுவலகத்திற்கு அனுப்பி செலுத்த வேண்டிய தொகையை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

பொறுப்பு: விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

↓

இணையத்தளம் ஊடாக அல்லது சமூகமளித்து கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

பொறுப்பு: விண்ணப்பதாரி

↓

பணத்தை அறவிட்டு அனுமதிப்பத்திரம் மற்றும் பற்றுச்சீட்டை வழங்குதல், பெறுமதியை வருமானத் தலைப்புக்கு வைப்புச் செய்து ஆவணங்களை இற்றைப்படுத்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

**இல்லை**

காரணங்களைத் தெளிவுபடுத்தி கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

பொறுப்பு: விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

↓

குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருப்பின், அவற்றை சரிசெய்து மீண்டும் அறிக்கையிடுதல்

பொறுப்பு: விண்ணப்பதாரி



# 12. பிரச்சார விளம்பரக் காட்சிப்படுத்தல் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

## 1. அறிமுகம்

(அ) ஏதேனும் பகிரங்க இடமொன்றிலிருந்து பார்க்கும்போது தெரியக்கூடியவாறு, பொதுமக்களுக்கு ஏதேனும் செய்திகளைத் தொடர்பாடல் செய்வதற்காக பலகை அல்லது பதாகையின் உதவியுடன் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பரங்கள் மூலம் காட்சி சூழலுக்கு ஏற்பட முடியுமான தடைகள் அல்லது சேதங்களைத் தடுக்கும் நோக்கத்துடன் பிரச்சார விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்துவதை ஒழுங்குபடுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களினால் துணைவிதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

(ஆ) விளம்பரமொன்றை அல்லது செய்தியொன்றை நபர்களுக்குத் தொடர்பாடல் செய்வதற்காக படங்கள் அல்லது சொற்கள் அல்லது வேறு ஏதேனும் வகையான சமிக்ஞைகளைப் பயன்படுத்தி எந்தவொரு பொது இடத்திலிருந்தும் பாரக்கும்போது தெரிகின்றவாறு ஏதேனும் இடத்தில் பொருத்தப்பட்ட அல்லது தூக்கி வைக்கப்பட்ட அல்லது ஒட்டி வைக்கப்பட்ட இல்லாவிடின் ஒளிரும் பலகையாக காட்சிப்படுத்தப்படுகின்ற, அச்சிடப்பட்ட அல்லது கைகளினால் வரையப்பட்ட அல்லது இலத்திரனியல் அல்லது வேறு வகையான ஒளிச் சமிக்ஞைகள் அல்லது வேறு ஏதேனும் முறையில் காட்சிப்படுத்தப்படுகின்ற தொடர்பாடலொன்று பிரச்சார விளம்பரம் என அழைக்கப்படும்.

(இ) “பொது இடம்” என்பதன் மூலம், ஏதேனும் வீதி, பாதை, கால்வாய், குளம், கடல், வானம் அல்லது அரசுக்கு அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திற்குச் சொந்தமான ஏதேனும் இடத்தில் அல்லது பொதுமக்கள் பயன்படுத்துகின்ற வேறு ஏதேனும் இடமொன்று கருதப்படும்.

(ஈ) மேற்குறித்த ஏதேனும் முறையிலான பிரச்சார விளம்பரமொன்று மற்றும் அதனைக் காட்சிப்படுத்தும் இடம், துணைவிதிகளின் ஏற்பாடுகளைப் பின்பற்றியுள்ளது என்பதற்காக உள்ளூராட்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ், இந்தப் பணியில் “அனுமதிப்பத்திரம்” எனக் கருதப்படும்.

குறிப்பு: 1. பின்வரும் ஏதேனும் காரணத்திற்காக ஏற்புடையவாறு காட்சிப்படுத்தப்படுகின்ற பிரச்சார விளம்பரங்கள், கட்டணங்களைச் செலுத்துவதற்கான மற்றும் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படும்.

ஒளிரும் பிரச்சார விளம்பரமொன்று அல்லது விமானப் பலகையொன்று அல்லாத -

(அ) “வாடகைக்கு வழங்கப்படும்” என்ற அல்லது “விற்பனைக்கு” என்ற பிரச்சார விளம்பரம்;

(ஆ) வீட்டுப் பெயர்ப் பலகைகள் அல்லது 0.093 சதுர மீட்டரைத் (சதுர அடி 1) தாண்டாத தொழில் அலுவலொன்றுக்கு ஏற்புடைய விளம்பரமொன்று;

(இ) வர்த்தக நடவடிக்கையொன்றுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனமொன்றில் காட்சிப்படுத்தப்படுகின்ற அந்த வியாபாரத்தின் இயல்பு, உரிமையாளரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சார விளம்பரமொன்று.

2. பின்வரும் ஏதேனும் காரணத்திற்கு ஏற்புடையவாறு காட்சிப்படுத்தப்படுகின்ற பிரச்சார விளம்பரங்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டிய தேவை இல்லாவிடினும் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒளிரும் பிரச்சார விளம்பரமொன்று அல்லது விமானப் பலகையொன்று அல்லாத -

(அ) நிகர இலாபம் தொண்டுப் பணியொன்றுக்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இசை நிகழ்ச்சியின் விளம்பரம்;

(ஆ) ஏதேனும் இசை நிகழ்ச்சியொன்று நடாத்தப்படுகின்ற இடத்தில் பொருத்தப்படுகின்ற அந்த இசை நிகழ்ச்சிக்கு ஏற்புடைய பிரச்சார விளம்பரம்;

(இ) சமய, அரசியல் அல்லது பொதுக் கூட்டமொன்று தொடர்பான அறிவித்தல்

3. ஏதேனும் பிரச்சாரப் பணியொன்றுக்காக காட்சிப்படுத்தப்படுகின்ற சுவரொட்டிகளுக்கு அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாவிடினும், அவ்வாறான ஏதேனும் சுவரொட்டியை ஒட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் தவிர வேறு இடமொன்றில் ஒட்டுவது குற்றமாகும்.

## 2. சட்டரீதியான அதிகாரம்

ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்திற்குக் கிடைத்துள்ள அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்டதாக கருதப்படுகின்ற, பிரச்சார விளம்பரங்கள் மற்றும் காட்சிச் சூழல் பற்றிய துணைவிதிகள்.

## 3. கட்டணங்கள்

ஏற்புடைய துணைவிதிகளின் கீழ் உள்ளூராட்சி நிறுவனத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்டு, அது பற்றி வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்ற கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

## 4. சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

(அ) இங்கே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரித்து சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்.

(ஆ) A 4 அளவிலான கடதாசியில் அச்சிடப்பட்ட அல்லது கையினால் வரையப்பட்ட (பயன்படுத்தப்படும் வர்ணங்களையும் காட்டுகின்ற), காட்சிப்படுத்த எதிர்பார்க்கும் பிரச்சார விளம்பரத்தின் சமச்சீரான மாதிரியொன்று;

(இ) ஏதேனும் வீதியின் இருப்புப் பகுதியில் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்ற பிரச்சார விளம்பரப் பலகையாக இருப்பின் ஏற்புடையவாறு அந்த வீதி சொந்தமாகவுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து அதற்காக வழங்கப்பட்ட அனுமதி;

(ஈ) ஏற்புடைய பிரச்சார விளம்பரப் பலகை காட்சிப்படுத்தப்படும் இடத்திற்குரிய பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவினால் இணக்கம் தெரிவித்து வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) ஏதேனும் தனியார் காணியொன்றில் அல்லது கட்டிடத்தில் பொருத்தப்படுகின்ற அல்லது காட்சிப்படுத்தப்படுகின்ற பிரச்சார விளம்பரமாக இருப்பின், அந்தக் காணியின் அல்லது கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளர்களினால் அதற்கு இடமளிப்பதற்கு விருப்புத் தெரிவிக்கும் கடிதத்தின் பிரதி.

குறிப்பு: சபையின் இணையத்தளம் ஊடாக அல்லது முன் அலுவலகத்திற்கு சமூகமளித்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம், கையளிக்கலாம்.

## 5. ஒழுங்குமுறை

| ஒழுங்குமுறை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| இணையத்தளம் ஊடாக அல்லது முன் அலுவலகத்திற்கு சமூகமளித்து பிரச்சார விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்தலுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் | | விண்ணப்பதாரி |
| ஏற்புடைய இணைப்புக்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, இணையத்தளம் ஊடாக அல்லது முன் அலுவலகத்திற்கு சமூகமளித்து கையளித்தல் | பிரச்சார விளம்பரத்தினை நிறுவுவதற்கு 7 நாட்களுக்கு முன்பு | விண்ணப்பதாரி |
| கோரிக்கை, துணைவிதியின் நியமங்களுடன் ஒத்துச் செல்கின்றதா என்பதைப் பரீட்சித்து விண்ணப்பதாரிக்குத் தொடராய்வு இலக்கமொன்றை வழங்குதல் | விண்ணப்பப் படிவத்தினைக் கையேற்றவுடன் | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| துணைவிதியின் நியமங்களுடன் இயைந்து செல்கின்றதா என்பதைப் பரீட்சித்து அறவிடப்பட வேண்டிய கட்டணம் தொடர்பான பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்காக வருமானப் பரிசோதகருக்கு முன்வைத்தல் | விண்ணப்பப் படிவத்தினைக் கையேற்றவுடன் | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| துணைவிதியின் நியமங்களுடன் இயைந்து செல்வதைப் பரீட்சித்து அறிவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பான பரிந்துரையை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக நகர ஆணையாளர்/ செயலாளருக்கு முன்வைத்தல் | விண்ணப்பப் படிவம் தனக்குக் கிடைத்தவுடன் | வருமானப் பரிசோதகர் |

| ஒழுங்குமுறை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| அனுமதிப்பத்திரத்தை வழங்குவது பற்றிய பரிந்துரையை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல் தொடர்பான தீர்மானத்தினை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு வழங்குதல் | பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் தனக்குக் கிடைத்த திகதியிலேயே | நகர ஆணையாளர்/ செயலாளர் |
| கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டிருப்பின், ஏற்புடைய அனுமதிப்பத்திரத்தைத் தயாரித்து நகர ஆணையாளரின்/ செயலாளரின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்டு முன் அலுவலகத்திற்கு அனுப்பி செலுத்த வேண்டிய தொகையை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் | அங்கீகரிக்கும் அல்லது நிராகரிக்கும் கட்டளை தனக்கு கிடைத்த திகதியில் | விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |
| இணையத்தளம் ஊடாக அல்லது சமூகமளித்து ஏற்புடைய கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் | | விண்ணப்பதாரி |
| பணத்தை அறவிட்டு அனுமதிப்பத்திரம் மற்றும் பற்றுச்சீட்டை வழங்குதல், பெறுமதியை வருமானத் தலைப்புக்கு வைப்புச் செய்து ஆவணங்களை இற்றைப்படுத்தல் | பணத்தை அறவிட்டவுடன் | முன் அலுவலக உத்தியோகத்தர் |

குறிப்பு: பிரச்சார விளம்பரப் பலகைகளை அமைக்கும்போது மற்றும் பேணிச் செல்லும்போது பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

(அ) சகல பிரச்சார விளம்பரப் பலகைகளிலும் அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் பெற்றவரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் பிரச்சார விளம்பரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) பிரச்சார விளம்பரம் ஊடாக வெளித் தரப்பினருக்கு நிகழ முடியுமான விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அவசியமான வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

(ஈ) சாரதிகளின் கவனத்திற்குத் தடை ஏற்படாத வகையில் பிரச்சார விளம்பரங்களை அமைக்க வேண்டும். உதா - வீதிகள் ஊடாக பதாகைகளைக் காட்சிப்படுத்தக் கூடாது என்பதுடன், சாரதிகளின் வீதி மீதான கவனத்தில் ஏற்பட முடியுமான தடைகளைத் தவிர்க்க வேண்டும்.

(உ) நகர ஆணையாளர்/ செயலாளரினால் விசேடமாக விதிக்கப்பட்ட கட்டளைகள் ஏதுமிருப்பின், அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

இணைப்பு

## . . . . . . . . . . . . . . . . . சபை

## விளம்பரப் பலகைகள்/ பதாகைகளைக் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.

1. தனிப்பட்ட தகவல்கள்.

(அ) விண்ணப்பதாரியின் பெயர் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ஆ) அடையாள அட்டை இலக்கம் :. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ஈ) அலுவலகத் தொலைபேசி இலக்கம் : . . . . . . . . . . . . . . . . . . . . . .

பெக்ஸ் : . . . . . . . . . . . . . . . . . . . . . .

(உ) மின்னஞ்சல் முகவரி : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ஊ)அஞ்சல் முகவரி : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

2. (அ) விண்ணப்பதாரி சமூகமளிக்காவிடின், பிரதிநிதியின் பெயர் மற்றும் முகவரி

: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ஆ) அடையாள அட்டை இலக்கம் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(இ) தொலைபேசி இலக்கம் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

3. பொருத்துவதற்கு ஏற்புடைய விளம்பரப் பலகை/ பதாகை ஊடாக செய்யப்படும் பிரச்சாரம்:

சமய அலுவலொன்று/ இசை நிகழ்ச்சியொன்று அல்லது வேறு கேளிக்கைப் பணி/ கல்வி நடவடிக்கை/ வியாபாரப் பிரச்சாரம்/ ஏனைய (பணியைக் குறிப்பிடுக) ................................................................................. (விளம்பரத்தின் மாதரியொன்றை A4 அளவிலான கடதாசியொன்றில் உள்ளடங்கும் வகையில் தயாரித்து விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவும்)

4. விளம்பரப் பலகையின்/ பதாகையின் அளவு: நீளம்: செ.மீ.. . . . . . . . . . . . . . அகலம்: செ.மீ. . . . . . . . . . . . .

5. காட்சிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் விளம்பரங்கள்/ பதாகைகளின் எண்ணிக்கை: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

6. விளம்பரங்கள்/ பதாகைகள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் தொடர்பான விபரங்கள்: (வழங்கப்பட்டுள்ள வெற்றிடம் போதுமானதாக இல்லாவிடின் தனியான கடதாசியொன்றில் இத்தகவல்களை உள்ளடக்கவும். அந்தக் கடதாசியின் இறுதியில் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை இட வேண்டும்.)

| தொடரிலக்கம் | விளம்பரம்/ பதாகை பொருத்தப்படும் இடம் | விளம்பரம்/ பதாகை பொருத்தப்படும் இடத்தின் | | |
|---|---|---|---|---|
| | | உரிமையாளர் | உரிமையாளரின் முகவரி | தொலைபேசி இலக்கம் |
| 01. | | | | |
| 02. | | | | |
| 03. | | | | |
| 04. | | | | |

(விளம்பரம்/ பதாகை காட்சிப்படுத்தப்படும் காணியின் அல்லது கட்டிடத்தின் சட்டபூர்வ உரிமை உள்ள நபரிடமிருந்து அல்லது நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்து மூல முன் அனுமதிக் கடிதமொன்று விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏதேனும் இடத்தின் இயற்கையான அழகியல் காட்சிக்கு அல்லது அந்த இடம் ஊடாக பயணிக்கின்ற வாகன சாரதிகளின் கவனத்திற்கு அல்லது பாதுகாப்புக்குத் தடை ஏற்படுவதாக உள்ளூராட்சி நிறுவனம் கருதும் இடமாக அது இருப்பின், மேற்குறித்த ஏதேனும் இடத்தில் விளம்பரங்கள்/ பதாகைகளைப் பொருத்துவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. அனுமதி கோரப்பட்டுள்ள இடங்கள் தவிர வேறு இடமொன்றில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவது அல்லது கோரப்பட்டுள்ள எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையான விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பின், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டும்.)

7. விளம்பரங்கள்/ பதாகைகளைக் காட்சிப்படுத்த எதிர்பார்க்கும் காலம்:

20 . . . . . . . . . . . . .முதல் 20 . . . . . . . . . . . . . வரை

8. விளம்பரங்கள்/ பதாகைகளைக் காட்சிப்படுத்த எதிர்பார்க்கும் காலம்

20 . . . . . . . . . . . . .முதல் 20 . . . . . . . . . . . . . வரை

பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன். இந்த விண்ணப்பப் படிவத்தின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள காலம் முடிவடையும் திகதியில் சகல விளம்பரப் பலகைகள்/ பதாகைகளையும், அவை

பொருத்தப்பட்டுள்ள இடங்களிலிருந்து அகற்றிக் கொள்வதற்கும், இல்லாவிடின் சபையினால் அவற்றை அகற்றுவதற்கு செலவாகும் கட்டணத்தைச் செலுத்துவதற்கும் உறுதியளிக்கிறேன். இந்த விளம்பரப் பலகைகள்/ பதாகைகள் பொருத்தப்பட்டுள்ள காணியின் அல்லது கட்டிடத்தின் உரிமையாளரினால் அல்லது வேறு யாரேனும் தரப்பினரால் அவற்றை அகற்றுதல் அல்லது உருக்குலைத்தல் அல்லது அவற்றுக்கு சேதம் விளைவித்தல் அல்லது வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டமொன்றின் கீழ் அந்த விளம்பரப் பலகைகள்/ பதாகைகள் காட்சிப்படுத்தலைத் தடுக்கும் செயற்பாடு பற்றி சபை பொறுப்புக் கூற மாட்டாது எனவும் மற்றும் இந்த விளம்பரப் பலகைகள்/ பதாகைகள் மூலம் ஏதேனும் தரப்பினருக்கு ஏற்படும் சேதங்கள் சம்பந்தமான சகல பொறுப்புக்களையும் நான் பொறுப்பேற்கிறேன் எனவும், அதற்காக சபையினால் வழங்கப்பட்ட அனுமதி ஊடாக எனக்கு உரிமையொன்று கிடைக்க மாட்டாது என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன். விளம்பரப் பலகைகள்/ பதாகைகள் காட்சிப்படுத்தலுக்கான கட்டணங்களை அறவிட்டு, விளம்பரப் பலகைகள்/ பதாகைகளைக் காட்சிப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியை வழங்குமாறு வேண்டுகிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

---

**அலுவலக உபயோகத்திற்கு.**

வருமானப் பரிசோதகர்,

மேற்குறித்த கோரிக்கை தொடர்பாக, பிரச்சார விளம்பரங்கள் மற்றும் காட்சிச் சூழல் பற்றிய துணைவிதிகளுக்கு ஏற்ப அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை ஆராய்ந்து, உங்களது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் நகர ஆணையாளருக்கு/ செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முன் அலுவலக உத்தியோகத்தர்

---

நகர ஆணையாளர்/ செயலாளர்,

மேற்குறித்த விண்ணப்பப் படிவத்தில் 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில்/ தொடரிலக்கம் ................ ஆகிய இடங்களில் தவிர* விளம்பரப் பலகைகள்/ பதாகைகளைக் காட்சிப்படுத்துவதற்காக, பின்வருமாறு கட்டணங்களை அறவிடுவதற்குப் பரிந்துரை செய்கிறேன்/ துணைவிதிகளின் நியமங்களுக்கு முரணானது என்பதால் பரிந்துரை செய்ய முடியாது. *

| | |
|---|---|
| ஒரு விளம்பரப் பலகையின்/ பதாகையின் பரப்பளவு | சதுர மீட்டர். . . . . . . . . . . . . . . . . . |
| ஒரு விளம்பரப் பலகைக்கு/ பதாகைக்கு அறவிடப்பட | |
| வேண்டிய கட்டணம் | ரூபா. . . . . . . . . . . . . . . . . . |
| விளம்பரப் பலகை/ பதாகைகளின் எண்ணிக்கை | . . . . . . . . . . . . . |
| மொத்தக் கட்டணம் | ரூபா. . . . . . . . . . . . . . . . . . |
| மொத்த அறவீடு | ரூபா. . . . . . . . . . . . . . . . . . |
| அரசினால் விதிக்கப்பட்ட வரி (1) | ரூபா. . . . . . . . . . . . . . . . . . |
| அரசினால் விதிக்கப்பட்ட வரி (2) | ரூபா. . . . . . . . . . . . . . . . . . + |
| மொத்தம் | ரூபா. . . . . . . . . . . . . . . . . . |

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . .   . . . . . . . . . . . . . . . . . . .

வருமானப் பரிசோதகர்

விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்,

* மேற்குறித்த பரிந்துரையை அங்கீகரிக்கிறேன்.
* அனுமதிப்பத்திரத்தைத் தயாரித்து எனது கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கவும்.
* மேற்குறித்த கோரிக்கையை நிராகரிக்கிறேன். அது பற்றி அறிவிக்கும் கடிதத்தினை எனது கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கவும்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . .   . . . . . . . . . . . . . . . . . . .

நகர ஆணையாளர்/ செயலாளர்

நகர ஆணையாளர்/ செயலாளர்,

* மேற்குறித்த கட்டளைக்கு ஏற்ப அனுமதிப்பத்திரத்தை/ கோரிக்கையினை நிராகரிக்கும் கடிதத்தினை கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கிறேன். *

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . .   . . . . . . . . . . . . . . . . . . . .

விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

---

விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்,

கோரிக்கையினை நிராகரிக்கும் கடிதம் கையொப்பமிடப்பட்டது. வழங்கவும்./ கையொப்பமிட்ட அனுமதிப்பத்திரத்தை முன் அலுவலகத்திற்கு அனுப்பவும்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . .   . . . . . . . . . . . . . . . . . . . .

நகர ஆணையாளர்/ செயலாளர்

---

முன் அலுவலக உத்தியோகத்தர்,

கையொப்பமிட்ட அனுமதிப்பத்திரம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. கட்டணத்தை அறவிட்டு, அனுமதிப்பத்திரத்தை வழங்கி, அறவீடு தொடர்பான தகவல்களைக் குறிப்பிட்டு இந்த விண்ணப்பப்படிவத்தை மீண்டும் எனக்கு அனுப்பவும்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . .
விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

---

விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்,

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. ஏற்புடைய கட்டணங்கள் பின்வருமாறு அறவிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மொத்த அறவீடு | ரூபா. . . . . . . . . . . . . . . . . . . |
| அரசினால் விதிக்கப்பட்ட வரி (1) | ரூபா. . . . . . . . . . . . . . . . . . . |
| அரசினால் விதிக்கப்பட்ட வரி (1) | ரூபா. . . . . . . . . . . . . . . . . . . + |
| மொத்தம் | ரூபா. . . . . . . . . . . . . . . . . . . |

பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி: . . . . . . . . . . . . . . . - 20 . . . . . . . . . . . . . . . .

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . .
முன் அலுவலக உத்தியோகத்தர்